# கிழக்கு மாகாண சபையினது இரண்டாவது பேரவையின் 2012 நவம்பர் 06 ஆம் திகதி அமர்வின் போது கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர் றியர் அட்மிரல் மொகான் விஜேவிக்கிரம அவர்களது சிறப்புரை

கிழக்கு மாகாண சபை
திருகோணமலை.

கிழக்கு மாகாண சபையினது இரண்டாவது பேரவையின்
2012 நவம்பர் 06 ஆம் திகதி அமர்வின் போது
கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர்
றியர் அட்மிரல் மொகான் விஜேவிக்கிரம அவர்களது
சிறப்புரை

கிழக்கு மாகாண சபை
திருகோணமலை.

கௌரவ தவிசாளர் அவர்களே,
கௌரவ முதலமைச்சர் அவர்களே,
கௌரவ அமைச்சர்களே,
கௌரவ மாகாண சபை உறுப்பினர்களே,
மற்றும் சகோதரர் சகோதரிகளே,

கிழக்கு மாகாண சபையின் இரண்டாவது பேரவைக்கான கூட்ட அமர்வை மங்களகரமாக ஆரம்பித்து வைத்து அதன் ஆரம்ப உரையினை நிகழ்த்த எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள இவ்வாய்ப்பினை நான் பெரும் பாக்கியமாக கருதுகின்றேன்.

சம்பிரதாய பூர்வமாக எனது உரை முதலாம் கூட்டத்தொடர் அமர்வின் போது நிகழ்த்தப்படவேண்டியிருந்தும் அதிமேதகு சனாதிபதி அவர்களால் ''திவிநெகும'' சட்டமூல வரைபிற்கு மாகாண சபையின் கருத்தினை துரிதமாக பெற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டமையால் இக்கூட்டத்தொடரினை இன்றே வைபவ ரீதியாக ஆரம்பிக்க வேண்டியிருந்தது. இன்றைய தினத்தில் இம்மாகாண சபையினைக் கூட்டுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்ட கௌரவ அவைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முதற்கண் நான், இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினதும் அவர்களினது அரசின் சார்பாகவும் கிழக்கு மாகாண சபைக்கு மக்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ள உங்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கை அரசியலில் புதியதோர் அத்தியாயத்தை உருவாக்கியுள்ள இச்சந்தர்ப்பம் உங்களுக்கு மட்டுமன்றி கிழக்கு மாகாண மக்கள் அனைவருக்கும் வரலாற்றுப் பெருமைமிக்க சிறந்த சந்தர்ப்பமாகவே நான் கருதுகின்றேன். 30 வருட கால கொடூரமான பயங்கரவாதத்திற்கு உட்பட்டிருந்து ஆயுத பலத்திற்கு தமது ஜனநாயக உரிமைகளை இழந்து யுத்தத்தினால் பாதிப்புற்ற மக்கள் தற்போது சுதந்திரத்தையும் சமாதானத்தையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது உள்ளத்திலிருந்த யுத்த பீதியும், அதன் குரூரங்களும் மறைந்து கொண்டிருக்கும் இச் சந்தர்ப்பத்தில் மீண்டும் அத்தகைய இருண்ட யுகத்தை உங்களுக்கு நினைவுபடுத்த நான் விரும்பவில்லை. ஆயினும் நீங்கள் இன்று அனுபவிக்கின்ற இச் சுதந்திரத்தின் வழிகாட்டியான அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களையும், அதற்காக தோள் கொடுத்த போர் வீரர்களையும் இச் சிறப்பான சந்தர்ப்பத்தில் நினைவு கூர வேண்டியது எனது கடமையாகும். அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் வீரம் செறிந்த தலைமைத்துவத்துவமும் மற்றும் போர் வீரர்களின் பாரிய அர்ப்பணிப்புக்களும் இல்லாதிருந்திருப்பின் இம்மாபெரும் வாய்ப்பானது உருவாகியிருக்க முடியாது. அன்று

கிழக்கு மாகாணத்தின் மாவில் ஆறிலிருந்து முன்னெடுக்கப்பட்ட மனிதாபிமான நடவடிக்கை வட மாகாணத்தின் வெள்ள முள்ளிவாய்க்காலின் நீரேரியுடன் இலங்கையின் ஒட்டுமொத்த நிலப் பரப்பெங்கும் சமாதான ஒளிக்கீற்றை பரப்பி நிறைவடைந்தது.

நீண்ட காலமாக அச்சத்துடனும் சந்தேகங்களுடனும் இங்கு வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த மக்கள் தற்போது எந்தவொரு புறச்சக்திகளுக்கும் ஆட்படாது சுதந்திரமாக தமது தொழில்களிலும் வர்த்தக முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

2008 யூன் மாதம் 11ம் திகதி கிழக்கு மாகாண சபை பேரவையின் முதலாவது அமர்வினை ஆரம்பித்து வைக்க நான் வருகை தந்திருந்த சந்தர்ப்பத்தில் வடபுலத்தை மீட்பதற்கான மனிதாபிமான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமிருந்ததுடன் அவ்வேளையில் வெல்லப்பட்டிருந்த கிழக்கு மாகாணத்தின் சுதந்திரமும் ஜனநாயக உரிமைகளும் துரிதமாக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தன.

கடந்த காலத்தில் எமது மாகாணத்தில் இயங்கிய வண்ணமிருந்த காவல் அரண்கள் மற்றும் வீதித் தடைகள் எதனையும் இன்று எம்மால் காண முடியாதுள்ளது. ஆயுதமேந்திய குழுக்களின் கட்டளைகளின் படி அன்று மாகாண சபைத் தேர்தலில் பங்குபற்ற முன்வராதிருந்த பல்வேறு அரசியல் கட்சிகளும், குழுக்களும் இன்று எந்தவொரு நபரினதும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகாமல் தேர்தலில் போட்டியிட முன்வந்திருக்கின்றமையின் வாயிலாக மாகாண மக்கள் முழுமையான சுதந்திரத்தையும் ஜனநாயகத்தினையும் பெற்றுள்ளனர் என்பது தெரிய வருகின்றது.

தற்போது ஆயுதமேந்திய குழுவினரால் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்காக குழந்தைகள் கடத்திச் செல்லப்படுவதில்லை. நீங்கள் பெருஞ் சிரமத்துடன் உழைத்தவற்றை கப்பமாகவோ அல்லது வேறு வகைகளிலோ எவருக்கும் வழங்கத் தேவையில்லை. இளைஞர்கள் காணாமல் போவதில்லை. ஒரு சாரார் ஏற்றுக் கொள்ளத் தயங்கினும் இன்றைய உண்மை நிலை இதுவே.

**புவியியல் அமைப்பு**

கௌரவ தவிசாளர் அவர்களே,

கிழக்கு மாகாணம் இலங்கையின் கிழக்கு கடற்கரையையொட்டி அமைந்துள்ளதுடன் அது வடக்கில் வட மாகாணத்தையும் கிழக்கில் வங்காள விரிகுடாவினையும் மேற்கில் வட மத்திய மாகாணத்தையும் தென்மேற்கில் மத்திய மாகாணத்தையும் தெற்கில் ஊவா மற்றும் தென் மாகாணங்களையும் எல்லைகளாக கொண்டமைந்திருக்கின்றது. கிழக்கு மாகாணத்தின் பரப்பளவானது 390 சதுர கிலோமீற்றர் பரப்பு உள்ளூர் நீர் நிலைகளையும் உள்ளடக்கி மொத்தமாக 9,792 சதுர கிலோமீற்றர்களாக அமைவதுடன் இது இலங்கையின் மொத்த நிலப்பரப்பின்

16% ஆகும். கிழக்கு மாகாணமானது கவர்ச்சிகரமான நீண்ட கடற்கரைகள், உள்ளூர் நீர்த்தேக்கங்கள், கலப்பு வனாந்தரங்கள், விவசாயத்திற்கு உவப்பான வளமிகு நிலப்பரப்பு என்பவற்றை கொண்டிருப்பதுடன் இங்கு அமைந்துள்ள சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை துறைமுகமானது ஏனைய மாகாணங்களைவிட கிழக்கு மாகாணத்திற்கு மிகச் சிறப்பான பெருமையை சேர்க்கின்றது.

**சனத்தொகை**

2012ம் ஆண்டில் இடம்பெற்ற குடிசன மதிப்பீடுகளின்படி கிழக்கு மாகாண மொத்த சனத்தொகை 1,547,377 என்பதுடன் இது இலங்கையின் மொத்த சனத்தொகையில் 7.6% ஆகும். கிழக்கு மாகாணத்தில் சிங்களம், தமிழ், முஸ்லிம் ஆகிய மூவினங்களும் அண்ணளவாக சமமான எண்ணிக்கையில் வாழ்வதுடன் இம் மாகாணமானது பல்லின மக்கள் இணைந்து வாழ்கின்றமைக்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

**நிர்வாகம்**

கிழக்கு மாகாண மக்களுக்கு பொதுச் சேவைகளை வழங்கும் பொருட்டு மாகாண சபையானது ஐந்து அமைச்சுக்களையும் அவற்றின்கீழ் 20 திணைக்களங்களையும் கொண்டுள்ளது. அத்துடன் பிரதம செயலாளரின் கீழ் செயற்படுகின்ற 13 நிறுவனங்களையும் உள்ளடக்கிய ஒரு நிர்வாகக் கட்டமைப்பும் எமக்குரித்தாக உள்ளதுடன் மாகாணத்திற்கான அரச உத்தியோகத்தர்களை நியமனம் செய்தல், இடமாற்றல், ஒழுக்காற்று நடவடிக்கைகள் என்பன ஆளுநரினால் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் ஊடாக நடைபெற்று வருகின்றன.

கிழக்கு மாகாணமானது திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மூன்று நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியிருப்பதோடு அவற்றுள் மொத்தமாக 45 பிரதேச செயலகங்களும் 1,087 கிராம சேவையாளர் பிரிவுகளும் அடங்குகின்றன. மாவட்ட செயலகங்களினால் உரிய மாவட்டத்தில் இனங்காணப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. சம்பந்தப்பட்ட மாவட்டங்களினது மாவட்ட இணைப்புக் குழுக்களானவை அந்த மாவட்டங்களின் அபிவிருத்தி நிர்வாகப் பணிகளை முன்னெடுப்பதில் பெரிதும் உறுதுணையாக விளங்கி வருகின்றன.

**கிழக்கு மாகாண சபையின் உருவாக்கம்**

வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆயுதமேந்திய பிரிவினரினால் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத செயற்பாடுகளை முடிவுறுத்தும் பொருட்டு ஒரு ஆரம்ப அரசியல் தீர்வாக அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபைகள் முறைமையின் கீழ் உருவாகிய வடக்கு கிழக்கு மாகாண சபை இரண்டு வருட குறுகிய கால செயற்பாட்டின் பின்னர் 1991 ஆம் ஆண்டில் கலைக்கப்பட்டது.

பூர்வீக காலம் முதல் சிறந்த விழுமியங்கள் அடங்கிய வாழ்க்கை முறைக்கு சொந்தக்காரர்களாக விளங்கிய இலங்கை வாழ் மக்கள் சமாதானத்துடன் சுதந்திரமடைந்த நாள் முதல் நன்கு வடிவமைக்கப்பட்ட சட்டவாக்க, நிர்வாக முறைமையுடன் கூடிய தேசிய, மாகாண, பிரதேச நிர்வாகங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஆயினும், பின்னர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உருவாகிய பயங்கரவாத செயற்பாடுகள் காரணமாக எழுந்த உவப்பற்ற சூழ்நிலைகளினால் சுமார் 17 வருடங்கள் இம் மாகாண சபைக்கான தேர்தலை நடத்த முடியாது போனமையின் விளைவாக பிற மாகாணங்களுடன் நோக்குகையில் இம் மாகாண மக்களுக்கு அபிவிருத்தியின் பயனை அறுவடை செய்ய முடியாது போயிற்று. 2006 ஒக்டோபர் 16ஆம் திகதி வழங்கப்பட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் வெவ்வேறு நிர்வாகப் பிரிவுகளாக வேறுபடுத்தப்பட்டதுடன் 2007 ஜனவரி 01ஆம் திகதி முதல் கிழக்கு மாகாணத்திற்கு தனியான ஆளுநரும் ஆளணியினரும் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு சுயாதீனமாக செயற்படத் தொடங்கியது. 2008 மே 10 ஆம் திகதி நடைபெற்ற கிழக்கு மாகாண சபைக்கான முதலாவது தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட பேரவை 2008 யூன் 11ஆம் திகதியிலிருந்து 2012 யூலை 27ஆம் திகதி வரை கிழக்கு மாகாண மக்களுக்கு பெரும் நிவாரணமாக விளங்கியிருந்தது.

இலங்கை அரசியல் அமைப்பின் 13வது திருத்தமானது நிர்வாகத்தை பன்முகப்படுத்துகையில் மாகாண சபையினால் நிருவகிக்கப்பட வேண்டிய சட்டவாக்கம், நிர்வாகம் மற்றும் நிதி செயலாற்றல்கள் பற்றிய அதிகாரங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய துறைகள் தெளிவாகக் காட்டப்பட்டுகின்றது. அவ்வாறே, மாகாண சபைகளினதும், மத்திய அரசினதும் பொறுப்புக்கள், விடயப் பரப்புக்கள் பற்றி தனித்தனியாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மாகாண சபையினதும், மத்திய அரசினதும் உடன்பாட்டுடன் செயற்பட வேண்டிய விடயங்கள் ஒத்தியங்கும்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

யுத்தங்களின் காரணமாக அதுவரை காலம் அபிவிருத்தியில் நிஜ நிலையினை அடையாதிருந்த கிழக்கு மாகாணம் இன்று பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதனை நான் மீண்டும் கூற வேண்டியதில்லை. கிழக்கு மாகாணத்தை யுத்தத்திலிருந்து மீட்டெடுத்ததன் பின்பு அதிமேதகு ஜனாதிபதி

மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் சிந்தனைக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்ட "கிழக்கின் உதயம்" நிகழ்ச்சித் திட்டம் மூலம் எங்கள் மாகாணம் வரலாற்றில் இடம் பெறத்தக்க அபிவிருத்திக்கு உட்பட்டுள்ளதென்பது இரகசியமான ஒன்றல்ல. அம்பாறையில் பாணம முதல் திருகோணமலையில் தென்னமரவாடி வரை விரிந்தமைந்துள்ள கிழக்கு மாகாணம் கடந்த மாகாண சபை முடிவடைகின்ற போது வரலாற்றில் இதுவரை இடம்பெற்றிராத அளவிற்கு துரித அபிவிருத்தியினை தனதாக்கிக் கொண்டுள்ளது.

சுதந்திர இலங்கையின் முதற் பிரதம மந்திரியான கௌரவ டி.எஸ் சேனநாயக்கா அவர்களினது காலம் முதல் முன்னாள் அதிமேதகு ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவர்களது காலம் வரையுள்ள 55 வருட கால இடைவெளியில் கிழக்கு மாகாண அபிவிருத்திக்காக ஒதுக்கிய நிதியிலும் அதிகமான தொகை கடந்த 2008ஆம் ஆண்டிலிருந்து 2011 வரையிலான காலப்பகுதியினுள் கிழக்கு மாகாண அபிவிருத்தி கருதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். 2008 ஆம் ஆண்டிலிருந்து 2011ம் ஆண்டு வரை மாத்திரம் 53,000 மில்லியன் ரூபா கிழக்கு மாகாண அபிவிருத்திக்காக அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையிலான அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

கௌரவ தவிசாளர் அவர்களே,

இனப் பிரச்சினைக்கான தீர்வாக 13வது அரசியலமைப்பு திருத்தத்தின் கீழ் இந்நாட்டில் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமை நாட்டின் ஏனைய மாகாணங்களை மையமாக கொண்டு செயற்பட்டு வந்த போதிலும் அது கிழக்கு மாகாணத்தில் கடந்த மாகாண சபையானது ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னரே அதற்குரிய செயல்வடிவத்தை பெற்றது எனின் அது மிகையாகாது. மாகாண சபை முறைமையினுள் சிறுபராயத்தை கூட எட்டியிராத கிழக்கு மாகாண சபை இன்று ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் சிறப்பான முன்னேற்றத்திற்கு உரிமை பாராட்டி நிற்கின்றது எனக் குறிப்பிட்டுக் கூறமுடியும். கிழக்கு மாகாண சபையானது இன்று சமூக பொருளாதார கலாச்சாரத் துறைகளில் மிகவும் உன்னதமான அபிவிருத்தியை உரித்தாக்கிக் கொண்டிருக்கின்றது என்பதனை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். அதனை மேலும் வினைத்திறனுடன் பயன் மிக்கதாகவும் முன் கொண்டு செல்வதற்கு உறுதுணையாயிருப்பது உங்களனைவரினதும் கடமையாகும் எனக் கருதுகின்றேன்.

அன்று அம்பாறையில் இருந்து திருகோணமலை நோக்கி பயணிப்பதற்கு 10 மணித்தியாலங்களுக்கும் மேலான நேரத்தை செலவிட வேண்டியிருந்த நிலைமை யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் முன்னெடுக்கப்பட்ட துரித பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளின் ஊடாக முற்றாக மாறியிருக்கிறது. தற்போது கிழக்கு

மாகாணத்தினுள் பரந்துபட்ட வீதி அபிவிருத்தியும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மாகாணத்தில் பாரிய அளவிலான அபிவிருத்தி திட்டத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துதல் தற்போது அரசினால் தொடங்கப்பட்டுள்ளதுடன் மூன்று மாவட்டங்களிலும் நகர அபிவிருத்தித் திட்டங்களை அமுலாக்குதல் சுற்றுலா வலயங்கள் மற்றும் முழுமையான வீதிக் வலையமைப்பினை உருவாக்குதல் என்பன அவற்றுள் சிலவாகும்.

யுத்தத்தின் விளைவாக முடங்கியிருந்த கிழக்கு மாகாண உல்லாசக் கைத்தொழில் இன்று புத்துயிர் பெற்றுள்ளதுடன் கிழக்குக் கடற்கரையின் எழிலை கண்டுகளிக்க நாற் திசைகளிலிருந்தும் வருகை தரும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளால் ஒட்டுமொத்த தீவினதும் சுற்றுலாக் கைத்தொழில் அதி உயர் முன்னேற்றத்தை அடைந்திருக்கின்றது. தெற்கில் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு வந்த ஆடம்பரமான ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள், சுற்றுலா விடுதிகளை கிழக்கு மாகாணத்திலும் நிறுவி நிர்வகித்துக் கொள்ள முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளனர். யுத்தம் முடிவுற்றதன் பின்னரான கடந்த காலப் பகுதியினுள் கிழக்கு மாகாணத்தின் சுற்றுலாப் பயணிகளினது வருகை 80% அதிகரிப்பை கொண்டிருப்பதுடன் உலகை வலம் வரும் ஆடம்பர உல்லாசப் பயணிகள் கப்பல்கள் கூட இன்று எதுவித அச்சமோ, அவநம்பிக்கையோ இன்றி திருகோணமலை துறைமுகத்திற்கு வருகை தருகின்றன.

நாட்டின் பொருளாதாரத்திற்கு உறுதுணையாக விளங்கும் விவசாயத் தொழிலும், மீன்பிடிக் கைத்தொழிலும் எங்கள் மாகாண மக்களின் முக்கியமான வாழ்வாதாரத் தொழில்களாக இருப்பதுடன் அவை கடந்த காலங்களில் பாரிய பின்னடைவிற்குட்பட்டிருந்தன என்பதும் வெளிப்படையானதொன்றாகும். பல வருடங்களாக தமது சேனைப்பயிர் விளை நிலங்களுக்குள் செல்ல முடியாதிருந்த மக்களுக்கு இன்று தமது விவசாயத் தொழில் முயற்சிகளினை சுதந்திரமாக மேற்கொள்கின்ற வாய்ப்பு உருவாகியிருக்கின்றது. மீன்பிடித் தொழிலில் நிலவி வந்த சகல தடைகளும் கட்டுப்பாடுகளும் இன்று நீங்கியிருப்பதுடன் மீனவர்கள் தமது மீன்பிடி நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

**பொருளாதார அபிவிருத்தி**

கௌரவ தவிசாளர் அவர்களே,

யுத்தம் முடிவடைந்து ஜனநாயகம் நிலவத் தொடங்கியது முதல் கிழக்கு மாகாணத்திற்கு வருகை தருகின்ற முதலீட்டாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன் உலகில் பெரும் வரவேற்பினை பெற்று விளங்கும் பல்தேசியக் கம்பனிகளும், நிறுவனங்களும் கிழக்கு மாகாணத்தில் தமது முதலீட்டிற்கான வாய்ப்புக்களை இனங்கண்டு முன்னெடுத்த வண்ணம் உள்ளனர். கப்பல் துறையில்

உருவாக்கப்பட்டுள்ள கைத்தொழில் பேட்டையில் இதுவரை பல நிறுவனங்கள் தமது தொழிற்சாலைகளை நிறுவியுள்ளதுடன் திருகோணமலைத் துறைமுகத்தை அண்மித்தும் தொழிற் சாலைகள் பலவற்றை தோற்றுவிக்க தள வரைபுகள் தயாராகி வருகின்றன என்பதனையும் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி கொள்கின்றேன்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினூடாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற இப்பாரிய அபிவிருத்திப் பணிகளின் மூலம் மாகாணப் பொருளாதாரம் வலுப்படுத்தப்படுவது மட்டுமன்றி இப் பிரதேசத்தில் வேலைவாய்ப்பற்றிருக்கும் இளைஞர்கள், யுவதிகள் பெரும்பாலானவர்களிற்கு தொழில் வாய்ப்புக்களும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதென்பதனையும் இங்கு சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

இந்திய அரசும், இலங்கை அரசும் ஒன்றிணைந்து ஆரம்பிக்கவிருக்கும் சம்பூர் அனல் மின்நிலைய வேலைத்திட்டங்களும் இவ்வருடத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கின்ற அதேவேளையில் சம்பூர் பிரதேசத்தை மையமாகக் கொண்டு விசேட பொருளாதார வலயம் ஒன்றினை உருவாக்குவதும் அரசின் திட்டமாகும். இதன் வாயிலாக உருவாகும் தொழில் வாய்ப்புகளால் மாகாணத்தில் தொழில்தேடி கஷ்டப்பட்டு அலைவோருக்கு பேருதவியாக அமையும் என்பது எனது அபிப்பிராயமாகும். 2013ஆம் ஆண்டின் தேசத்திற்கு மகுடம் எனும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினையும் கண்காட்சியினையும் ஏற்படுத்த கிழக்கு மாகாணம் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் அக் கண்காட்சி அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப நிறுவன வளாகத்துள் இடம்பெறவுள்ளது.

அதற்கமைய தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மாகாணத்திலுள்ள மாவட்டங்களை ஒன்றிணைத்து அபிவிருத்திக்குட்படுத்த ஏதுவான அபிவிருத்திச் செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்துவதனால் எமது மாகாண மக்களுக்கு அபிவிருத்தியின் பலாபலன்கள் மேலும் பரந்து பகிரப்படும். இந்த வகையில் பிரதேச அபிவிருத்தி குழுக்கள் மூலமாக இனங் காணப்பட்டு மாவட்ட அபிவிருத்திக் குழுவினால் சிபாரிசு செய்யப்பட்ட முக்கிய திட்டங்கள் 2012ஆம் 2013ஆம் ஆண்டுகளுக்குள் நடைமுறைப்படுத்தும் பொருட்டு திருகோணமலை மாவட்டத்திற்கு 3,579 மில்லியன்களும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 3,061 மில்லியன்களும் அம்பாறை மாவட்டத்திற்காக 2,107 மில்லியன்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த அபிவிருத்தி செயற்பாடுகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சுக்கள், மாகாண சபை, பிரதேச சபைகள், மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச மட்டத்தின் கள உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை இணைத்தவாறாக முன்னெடுக்கப்படும்.

சீனன்குடா விமான நிலையத்தை உள்நாட்டு விமான நிலையமாக அபிவிருத்தி செய்யும் பணிகள் தற்போது தொடங்கப்பட்டுள்ள அதேநேரம் அம்பாறை, மட்டக்களப்பு விமான நிலையங்களும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இத்தகைய செயற்றிட்டங்களினால் எமது மாகாணம் அடுத்துவரும் வருடங்களில் பாரிய அபிவிருத்தி செயல்முறையினில் உட்படுத்தப்பட்டிருக்கும் என்பதனை இங்கு கூறாதிருக்க முடியாது. இலங்கையினை ஆசியாவின் ஆச்சரியமிக்க நாடொன்றாக மாற்ற மேற்கொண்டிருக்கும் பயணத்தில் கிழக்கு மாகாணம் மிக சிறப்பான பங்களிப்பை நல்கி நிற்க வேண்டுமென்பதே எனது விருப்பமாகும்.

2008ஆம் ஆண்டின் மொத்தத் உள்நாட்டு உற்பத்திக்கு கிழக்கு மாகாணப் பங்களிப்பு 5.6% ஆகும். அது 2011ம் ஆண்டில் 5.7% ஆக உயர்வடைந்துள்ளது. 2011ம் ஆண்டளவில் கிழக்கு மாகாண தனிநபர் வருமானம் 236,920 ரூபாவாக அமைந்திருந்தது.

**கல்வி**

கௌரவ தவிசாளர் அவர்களே,

யுத்தம் நிலவிய கடந்த காலப் பகுதியில் கிழக்கு மாகாணத்தில் வீழ்ச்சியுற்றிருந்த கல்வி நிலை 2008ஆம் ஆண்டிலிருந்து 2012ஆம் ஆண்டுவரையிலான காலப்பகுதியில் பாரிய முன்னேற்றத்தை அடைந்திருந்தது என்பதனை இங்கு விசேடமாக குறிப்பிட்டாக வேண்டும். கிழக்கு மாகாணத்தின் கல்வி நிலையை உயர்மட்டத்திற்கு கொண்டு செல்வதன் மூலம் இலங்கையினை ஆசியாவின் ஆச்சரிய மிகு நாடாக முன்னெடுத்துச் செல்லும் பயணத்தில் கிழக்கு மாகாணத்தினை மிகச் சிறந்த பங்குதாரராக மாற்றுவது நமது நோக்காக இருக்க வேண்டும். இதனை யதார்த்த நிலைக்கு உட்படுத்தப்படுவதனை நோக்கமாகக் கொண்டு 2008ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்தி திட்டங்களுக்காக மட்டும் செலவிடப்பட்ட தொகை 1,051.9 மில்லியன் ரூபாவாகும். அவ்வாறே, 2012ஆம் ஆண்டிற்கென அரசு 496.8 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இந்த வகையில் 2008 முதல் 2012 வரையிலான காலப்பகுதியினுள் கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்தி திட்டங்களுக்காக மட்டும் 1,548.7 மில்லியன் ரூபாயை அரசு ஒதுக்கியிருக்கின்றது. இதனை விடவும் திறைசேரியின் மூலமாக யுனிசெப் நிறுவனம் மற்றும் பிற நிறுவனங்கள் கல்வி அபிவிருத்தியின் பொருட்டு பெருமளவு நிதியை செலவிட்டுள்ளன.

அவ்வாறே, 2008ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கிழக்கு மாகாண கல்வி மேம்பாடு கருதி வகுப்பறை வசதிகளை உள்ளடக்கியதான 114 கட்டடங்களும், பாடசாலை நீர்வழங்கல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு

வசதிகளுக்காக 60 திட்டங்களும், 58 பாடசாலை விஞ்ஞான கூடங்கள், 51 நூலகங்கள், 16 கணிணி மற்றும் தகவல் தொழில்நுட்ப நிலையங்கள், 09 ஆசிரிய விடுதிகள், 652 பாடசாலை கட்டிட திருத்தங்கள் பராமரிப்பு வேலைகள், 08 அழகியற் கல்வி அறைகள், 04 செயற்பாட்டறைகள் மற்றும் 25 பல்தர செயற்பாட்டு வசதிகளுடன் கூடிய கட்டடங்கள் என்பவை நிர்மாணிக்கப்பட்டதுடன், 467 கணணிகளும் வழங்கப்பட்டிருந்தன. ஆசிரியர் பற்றாக்குறையானது கிழக்கு மாகாண கல்வித் துறையில் காணப்படுகின்ற பெரும் பிரச்சினை என நான் கருதுகின்றேன். அந்நிலையை சீர்செய்ய 2008ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் 3,111 தமிழ் மொழி மூல ஆசிரிய நியமனங்களும் 1,323 சிங்கள மொழி மூல ஆசிரிய நியமனங்களும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மாகாணத்தின் கல்வி நிலையை உயர் நிலைக்குக் கொண்டு செல்வது எமது அடிப்படை நோக்கங்களுள் ஒன்றென நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். அதன் ஓர் அம்சமாக 2008 முதல் 2012 வரையிலான காலப்பகுதிக்குள் 34 பாடசாலைகள் கிழக்கு மாகாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இக்கால கட்டத்தில் 33 பாடசாலைகள் ஆண்டு 06 இலிருந்து ஆண்டு 09 வரைக்குமாகவும் 51 பாடசாலைகள் ஆண்டு 10 இலிருந்து ஆண்டு 11 வரைக்குமாகவும் 56 பாடசாலைகள் உயர்தரப் பாடசாலைகளாகவும் தரமுயர்த்தப்பட்டிருக்கின்றன.

மனிதவள அபிவிருத்தி கருதி நிகழ்ச்சிதிட்டங்களையும் கருத்திட்டங்களையும் நடைமுறை படுத்துதல் ஒரு நாட்டிற்குரிய நீண்டகால முதலீடாகும். இதன் வாயிலாக கிடைக்கின்ற பெறுறே என்பது மிகுந்த ஆளுமையுடன் கூடிய கற்றறிந்த குடிமக்கள் தொகுதியினர் இந்நாட்டில் உருவாகுதலாகும். இந் நோக்கினை முன்னிலைப்படுத்தி சமூகத்தின் சுமுகமான நற்செயற்பாடு கருதி நாட்டினது தேசிய கல்விக் கொள்கைக்கு ஏற்ப மாகாணக் கல்வித் துறையில் பயனுறுதிமிக்க ஒரு தொகுதி வேலைகளை அடுத்து வரும் ஐந்தாண்டு காலத்தினுள் நிறைவேற்றுவதே எமது இலக்காகும்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலை செல்லும் வயதுடைய சகல சிறார்களுக்கும் அடிப்படைக் கல்வி வசதிகளை வழங்குவதை ஓர் அத்தியாவசிய பணியாகக் கருதிச் செயற்படுவதுடன் பாடசாலை செல்லாதிருக்கும் சிறார்களை இனங்கண்டு அவர்களை பாடசாலைக் கல்வியில் உள்வாங்குவதனை எமது அடிப்படைப் பொறுப்பாகக் கருதி செயற்பட வேண்டியுள்ளது. அவ்வாறே விசேட தேவையுடைய மாணவர்களிற்கு விசேட கல்விப் பிரிவுகளில் பயிற்சிகளை வழங்குவதும் முறை சாராக கல்விச் செயற்றிட்டங்களின் ஊடாக விசேட கல்விக்குரிய வாய்ப்புக்களையும் பயிற்சிக்கான சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் காணப்படுகின்ற கடுமையான ஆசிரியர் பற்றாக்குறையை குறைப்பதும் பாடசாலைக் கட்டமைப்பினுள் இரண்டாம் மொழி மற்றும் தொழில்நுட்பக்கல்வி அறிவினை மென்மேலும் பிரபல்யப்படுத்துவதும் எமது மற்றொரு நோக்கமாகும். அதன் மூலம் எமது எதிர்கால இலங்கைக்குத் தேவையான மனித வளங்களுக்கு பயிற்சி அளிக்க முடியும்.

**விவசாயம்**

கௌரவ தவிசாளர் அவர்களே,

கிழக்கு மாகாண மக்களில் 70% ஆனோரின் முக்கிய வாழ்வாதாரத் தொழில் விவசாயமாகும். ஒரு காலத்தில் இலங்கையின் தானியக் களஞ்சியம் எனப் போற்றப்பட்ட கிழக்கு மாகாணம் இலங்கையின் மொத்த நெல் உற்பத்தியில் 24% பங்களிப்பினை வழங்கி வருகின்றது. அதனை மென்மேலும் அதிகரிக்கச் செய்வதே எமது நோக்கமாகும்.

2006ஆம் ஆண்டளவில் கிழக்கு மாகாணத்தில் விவசாயப் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்ட நிலப்பரப்பு 197,552 ஹெக்டயர்களாக விளங்கியதுடன் தற்போது அவற்றுடன் புதிதாக மேலும் 65,200 ஹெக்டயர் நிலப்பரப்பு சேர்க்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக கிழக்கு மாகாண நெல் உற்பத்தியானது 0.742 மில்லியன் மெட்ரிக் தொன்களிலிருந்து 1.273 மில்லியன் மெட்ரிக் தொன்களாக அதிகரித்துள்ளது.

கிழக்கு மாகாண விவசாயதுறை இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.93% பங்களிப்பினை வழங்குவதுடன் அதனை மேலும் அதிகரிக்கச் செய்வது எமது அடிப்படை நோக்கங்களுள் ஒன்றாக அமைய வேண்டும். அவ்வாறே, மாகாணத்தின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற நிலப்பரப்பை அதிகரிக்கச் செய்வதும் எமது மற்றொரு நோக்கமாகும். உயர்தர விதைகளை அறிமுகப்படுத்தி நீர்ப்பாசனத்தையும் அபிவிருத்தி செய்வதுடன் விவசாயிகளுக்கு நல்ல சந்தை வாய்ப்பினையும் அவர்களது உற்பத்திகளுக்கு நல்ல விலையினையும் பெற்றுக் கொடுப்பதனை முக்கிய பணியாகக் கருதி அதற்கான நடவடிக்கைகளைத் தயார்படுத்த வேண்டியுள்ளது. அது போன்றே நவீன உலகிற்கேற்ற விவசாய தொழில்நுட்ப முறைமைகளின் ஊடாக எங்களது விவசாயிகளை வலுவூட்ட வேண்டியது எங்கள் முன்னுள்ள மற்றொரு சவாலாகும்.

விவசாயத் துறையின் முன்னேற்றம் கருதி அரசினால் 2008 முதல் 2011 வரையிலான காலப்பகுதியினுள் கிழக்கு மாகாணத்தில் சிறியதும் நடுத்தர அளவிலுமான 834 குளங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்துடன்

விவசாயிகளுக்காக வழங்கப்படுகின்ற விவசாய மானியத்தினை அதிகரித்தல், யுத்த காலத்தில் ஸ்தம்பிதமடைந்திருந்த விவசாயத் தொழிலை மேம்படுத்துதல் என்பவற்றை முக்கிய பணிகளாக கருதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. இதன் விளைவாக விவசாயப் பிரிவின் சகல குறிகாட்டிகளிலும் அபிவிருத்தியினை காணக் கூடியதாக இருப்பதுடன் "கிழக்கின் உதயம்" செயற்றிட்டத்தின் கீழ் நெற் களஞ்சியத் தொகுதிகள் மற்றும் கிராமிய விவசாய நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி என்பவற்றிற்காக இதுவரை 2,104 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளன.

**மீன்பிடிக் கைத்தொழில்**

கிழக்கு மாகாணம் மீன்பிடித் துறையில் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்று விளங்குகின்றது. யுத்த காலங்களில் மீன்பிடித் தொழிலுக்கு விதிக்கப்பட்டிருந்த பல்வேறு கட்டுப்பாடுகள் தடைகள் அனைத்தும் இன்று அரசினால் நீக்கப்பட்டிருக்கின்றன. நெடுநாட்கள் பயணிக்கும் நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய மீன்பிடி இயந்திரப் படகுகளைப் பயன்படுத்தியதன் வாயிலாக மீனவர்களின் வருமானம் அதிகரித்துள்ளதுடன் கிழக்கு மாகாணத்தின் மீன்பிடி உற்பத்திகளிற்கு வெளிநாட்டுச் சந்தைகளிலும் உயர் கேள்வி நிலவுகின்றமையினை யாவரும் அறிந்திருப்பீர்கள்.

இலங்கை கடற்கரையின் 23% ஆனது கிழக்கு மாகாணத்திற்கு உரித்தாக இருப்பதுடன் நன்னீர் மீன்பிடி உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகின்ற குளங்களின் எண்ணிக்கை 834 ஆகும். இந்தவகையில் கிழக்கு மாகாணத்தில் மீன் உற்பத்தியை முன்னேற்றுவதற்கான வாய்ப்புக்கள் அதிகளவில் இருப்பதனை நன்கு உணர முடியும். 2006ஆம் ஆண்டில் 6,540 மெட்ரிக் தொன்களாக இருந்த மாகாணத்தின் நன்னீர் மீன் உற்பத்தி 2011ம் ஆண்டளவில் 10,670 மெட்ரிக் தொன்களாக அதிகரிப்பை அடைந்துள்ளது. நாட்டின் நன்னீர் மீன்பிடி உற்பத்திக்கு கிழக்கு மாகாணத்தின் பங்களிப்பு 19% ஆகக் காணப்படுகின்றது.

**கால்நடை வளங்களின் அபிவிருத்தி**

கிழக்கு மாகாணம் மீட்கப்பட்டமையை அடுத்து கால்நடை அபிவிருத்தியானது மிகுந்த புத்துயிர்ப்பை பெற்றுள்ளது. கிழக்கு மாகாணத்தில் கால்நடை துறையினை துரிதமாக விருத்தி செய்ய வேண்டிய தேவை எழுந்துள்ளது. அதன் ஊடாக பொருளாதார ரீதியிலான வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளும் ஆற்றல் கிராமிய மக்களுக்கு கிடைக்கும். மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிபரங்களின் படி இலங்கையின் மொத்த கால்நடை உற்பத்தியில் 30% பங்களிப்பினையும் பால் உற்பத்தியில் 17% பங்களிப்பினையும் கிழக்கு மாகாணம் வழங்கி வருகின்றது.

பயங்கரவாதம் நிலவிய காலப்பகுதிகளில் பாலுற்பத்தியினைச் சேகரிக்கும் முறைமையினை நடைமுறைப்படுத்துவதில் தடைகள் உருவாகியதைப் போன்றே நல்லின கறவைப் பசுக்கள் இல்லாது போனமையாலும் பாலுற்பத்தியும் தடங்கலுற்றது. கால்நடை வைத்திய சேவைகளில் முன்னேற்றம் செய்யப்பட்டமையின் வாயிலாக கால்நடை அபிவிருத்தியினை அடைய முடியும் என்பதனை இன்று கிழக்கு மாகாணம் உணர்ந்திருப்பதுடன் அடுத்துவரும் 5 வருட காலப்பகுதியினுள் பாலுற்பத்தியினை இரு மடங்காக மாற்றியமைப்பதும் எமது அடுத்த இலக்காகவுள்ளது.

“கிழக்கின் உதயம்” அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் இம் மாகாணத்திற்கு 1,337 மில்லியன் ரூபா செலவில் 10 கால்நடை வைத்திய அலுவலகங்களையும் 09 பாலுற்பத்தி நிலையங்களையும் 14 பால் குளிரூட்டும் நிலையங்களையும் செயற்கை சினைப்படுத்தல் நிலையங்களையும் உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புள்ளி விபரங்களின் படி கிழக்கு மாகாணத்தின் வருடாந்த பாலுற்பத்தி அண்ணளவாக 64.7 மில்லியன் லீற்றர்களாக காணப்படுவதுடன் அவற்றுள் 30% ஆனவை பாலுற்பத்தி நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. சிறந்த முகாமைத்துவ செயலாற்றுகை மூலம் குறைந்த விலையில் நல்லினப் பசுக்களை பயன்படுத்தி பாலுற்பத்தியை அதிகரிப்பதன் வாயிலாக பாலுற்பத்தியினை ஊக்குவிப்பது கிழக்கு மாகாண சபையினது நோக்கமாகும்.

யுத்தம் நிலவிய காலப்பகுதியில் கறவைப் பசுக்களுக்கு போதியளவிலான மேய்ச்சல் நிலங்கள் காணப்பட்ட போதிலும் யுத்தம் முடிவுற்ற பின் தோன்றிய விவசாய உற்பத்திப் போட்டியின் காரணமாக மேய்ச்சல் நிலங்களை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன் விளைவாக கால்நடைகளுக்கான உணவுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு விவசாய அமைச்சு திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய 3 மாவட்டங்களிலும் மேய்ச்சல் நிலங்களுக்கான ஒரு பகுதிக் காணிகளை ஒதுக்கி வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுமாறு கால்நடை வளங்கள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

**சுகாதாரம்**

கௌரவ தவிசாளர் அவர்களே,

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் தேசிய சுகாதார குறிகாட்டிகளை எட்டுமளவிற்கு முன்னேற்றம் அடைந்துள்ளதுடன் சகல சுகாதார விடயங்களிலும் ஏனைய மாகாணங்களையும் விஞ்சியதாக விளங்குகின்றது. அதேபோன்று சுகாதாரத் தகவல்களை கணணி மயப்படுத்துவதிலும் கிழக்கு மாகாண சுகாதார சேவை முன்நிலை வகிக்கின்றது.

சகல பிரஜைகளுக்கும் போதுமான தரச்சிறப்பு வாய்ந்த சுகாதார சேவைகளை வழங்குவதுடன் மக்கள் குறுகிய தூரத்தில் குறைந்த நேர காலத்தினுள் வைத்திய சிகிச்சையினைப் பெற்றுக் கொள்ளும் விதத்தில் சுகாதார சேவையினை மேம்படுத்தலும் அதனைப் பேணுதலும் மாகாண சுகாதார சேவையினது முதன்மை நோக்கமாகும். கிழக்கு மாகாணத்தின் பௌதீக மற்றும் நிதி வளங்களை மிகச் சிறப்பாகப் பயன்படுத்தி நாட்டின் பெறுமதி வாய்ந்த வளமாகிய ஆரோக்கியமான மனித வளத்தினை கிழக்கு மாகாண அபிவிருத்திக்குப் பங்களிப்பு செய்வித்தலில் முன்னுதாரணமாக விளங்கும் விதத்தில் மாகாண சுகாதார சேவைகளை முன்னெடுத்துச் செல்ல எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

யுத்தகால சூழ்நிலைகளின் போது மூடப்பட்டிருந்த 30 வைத்தியசாலைகளை கடந்த 4 வருட காலப்பகுதியில் சகல வசதிகளுடனும் திறந்து வைக்க முடிந்துள்ளது. மேலும் விசேட வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், உதவி வைத்திய சேவை உத்தியோகத்தர்கள் தொகையை 913 இலிருந்து 1,081 ஆக அதிகரிப்புச் செய்து நியமனங்களை வழங்க முடிந்துள்ளது. பிரதேச வைத்தியசாலைகளாக இயங்கிய 07 வைத்தியசாலைகள் ஆதார வைத்தியசாலைகளாகத் தரமுயர்த்தப்பட்டு எல்லா மக்களிற்கும் போதுமான, தரமான சேவைகளை வழங்கக்கூடிய ஆற்றலை கொண்டவையாக இவை காணப்படுகின்றன. வைத்தியசாலைகளுக்குத் தேவையான 23 அம்புலன்ஸ் வண்டிகளை கடந்த காலத்தின் போது வழங்க முடிந்துள்ளது. அதன் மூலமாக கிழக்கு மாகாணத்தின் சுகாதார சேவைகள் வலுப்பெற்றுள்ளன.

தாய், சிசு சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக புதிய சிகிச்சைப் பரிசோதனை நிலையங்களை நிர்மாணிப்பதிலும் தற்போதுள்ள சிகிச்சை பரிசோதனை நிலையங்களை புனர் நிர்மாணித்தலும் மேம்படுத்துதலும் எமது எதிர்காலத் திட்டங்களுள் அடங்குகின்றன. தற்போது செயற்பட்டு வரும் ஆதார வைத்தியசாலைகள் மற்றும் கிராமிய வைத்தியசாலைகளின் வசதிகளை மேம்படுத்துதலும் அடுத்து வரும் ஆண்டுகளில் இடம் பெறவுள்ளன. கிழக்கு மாகாணத்தில் தற்போது இயங்கி வரும் ஆயுர்வேத வைத்தியசாலைகளை மேம்படுத்துவதன் வாயிலாக எமது மக்களது பாரம்பரிய சொத்தாக விளங்கும் ஆயுர் வேத வைத்திய முறைமையானது மேலும் தக்க பாதுகாப்பினைப் பெறும். சமூக வைத்திய உத்தியோகத்தர்களது சேவைகளையும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**விளையாட்டுத்துறை அபிவிருத்தி**

சில தசாப்த காலங்களுக்கு முன்னர் கிழக்கு மாகாணம் விளையாட்டுத் துறைசார்ந்த ஆற்றல்களில் மிக உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்ததுடன் கரப்பந்து, காற்பந்து மற்றும் கூடைப்பந்து போன்ற விளையாட்டு போட்டிகளில் தேசிய மட்டத்தில்

வெற்றிகளை சொந்தமாக்கிக் கொண்டமை கடந்த காலச் சான்றுகளில் உள்ளன. ஆயினும் கிழக்கு மாகாணத்தில் நிலவிய பாதகமான பாதுகாப்பு சூழ்நிலைகள் காரணமாக அத்தகைய வெற்றிகள் எம்மிடமிருந்து தூர விலகிச் சென்றுள்ளன. எவ்வாறாயினும் மீண்டுமொருமுறை எமது மாகாணம் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் இடம் பிடிக்கத் தொடங்கியுள்ளது. கடந்த 5 வருடங்களிலும் தொடர்ச்சியாக கபடி ஆட்டத்தில் ஆண்கள் பிரிவில் வெற்றி வாகை சூடும் வாய்ப்பானது எமது மாகாணத்திற்கு கிட்டியுள்ளது.

அவ்வாறே தேசிய விளையாட்டுப் போட்டிகளில் எமது மாகாணம் வென்றெடுக்கும் பதக்கங்களினது எண்ணிக்கையும் அதிகரித்துச் சென்றுள்ளமையை நாம் காண முடியும். 2007ஆம் ஆண்டில் 04 பதக்கங்களை வென்றிருந்த நிலை 2011ம் ஆண்டில் 19 பதக்கங்கள் என்ற எண்ணிக்கையாக உயர்ந்துள்ளது.

2008ஆம் ஆண்டு முதல் கிழக்கு மாகாண விளையாட்டு மைதானங்களை மேம்படுத்தலையும் அதன் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதனையும் இலக்காகக் கொண்டு 54 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் திருகோணமலை மெக்ஹெய்சர் விளையாட்டு மைதானம் மாகாண விளையாட்டு மையத் தொகுதியாக அபிவிருத்தி செய்யப்படவிருப்பதுடன் மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தையும் அம்பாறை நகர சபை விளையாட்டு மைதானத்தையும் சகல வசதிகளையும் உள்ளடக்கியதாக அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அவ்விளையாட்டரங்குகளில் புற்றரைகளுடன் கூடிய சர்வதேச தரத்திலான கிரிக்கெட் மைதானமொன்றினையும் றகர், கூடைப்பந்து, காற்பந்து, கரப்பந்து மைதானங்களுடன் நீச்சல் தடாகங்கள் உடற்பயிற்சிக் கூடங்களையும் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. எமது மாகாண வீர வீராங்கனைகளுக்கும் நாட்டின் ஏனைய மாகாணங்களின் வீர வீராங்கனைகள் அனுபவிக்கின்ற உயர் வசதிகளை பெற்றுக் கொடுத்து அதனூடாக அவர்களது விளையாட்டுத் திறனை மேம்படச் செய்வதும் அரசின் பிரதான நோக்கமாகும்.

வருடந்தோறும் கண்கவரும் வண்ணம் இடம்பெற்று வரும் தேசிய சுதந்திர தின விழா கொண்டாட்டத்தினை அடுத்த வருடம் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் திருகோணமலை மாவட்டத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள அதேநேரம் தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சி அம்பாறையில் நடைபெறவுள்ளது. எங்கள் மாகாணம் கடந்த காலங்களில் அடைந்திருக்கும் புத்துயிர்ப்பினையும் அதன் முக்கியத்துவத்தினையும் அவை வெளிக்காட்டி நிற்கும் என்பது எமது கருத்தாகும்.

இலங்கை அரசியலமைப்பின் பிரகாரம் எந்தவொரு மாகாண சபையும் தமது விருப்புக்களை நிறைவேற்றிக் கொள்ள தனித்துப் பயணிக்க முடியாது. அதற்கு

எப்போதும் மத்திய அரசின் அனுசரணையையும் ஒத்துழைப்பினையும் பெற்றுக் கொள்ள வேண்டும். உதாரணமாக மாகாண சபைகளினது செயற்பாடுகளுக்கு வருடாந்தம் அரசினது வரவு செலவுத் திட்டத்திலிருந்து நிதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். மேல் மாகாண சபை உட்பட அனைத்து மாகாண சபைகளும் தமது செயற்பாட்டிற்காக மாகாணத்திலிருந்து ஈட்டிக் கொள்ளும் நிதியானது போதுமானதல்ல என்பது நாம் அனைவரும் அறிந்த விடயமாகும். அதுபோன்று மாகாண அரச சேவையின் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை தீர்மானித்தல் மத்திய அரசிற்குரியதாகும். ஒத்தியங்கும் விடயப் பரப்புக்களில் சட்டங்களை இயற்றுகையில் மத்திய அரசுடன் பரஸ்பர புரிந்துணர்வுடனும் பங்களிப்பினை நல்கியும் செயற்பட வேண்டியுள்ளது.

மாகாண சபை முறைமையின் நிர்வாகக் கட்டமைப்பு, கையளிக்கப்பட்ட விடயங்கள், அதிகார எல்லைகள் அரசியலமைப்பில் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன. இவற்றினை கிழக்கு மாகாணத்தின் மக்கள் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டுள்ள நீங்கள் நன்றாக விளங்கிக் கொண்டு மாகாண பொது மக்களுக்கு மிகுந்த பயனுறுதிமிக்க அபிவிருத்திகளையும் வினைத்திறனுடைய சேவைகளையும் வழங்க வேண்டியது உங்கள் அனைவரினதும் முக்கிய பொறுப்பும் கடமையுமாகும்.

இலங்கையின் மாகாணங்களுக்கிடையே கிழக்கு மாகாணத்திற்கென சிறப்பானதோர் இடமுண்டு. கிழக்கு மாகாணம் நாம் அனைவரும் பெருமைப்படத்தக்கதொரு மாகாணமாகும். ஆதிகாலம் முதற் கொண்டு இம் மாகாணத்தில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் நெருக்கமான நட்புணர்வோடு ஒன்றிணைந்து வாழ்ந்து வருகின்றனர் என்பதற்கு வரலாறு சான்று பகர்கின்றது. பிற்காலத்தில் எம் மத்தியில் சிறிய சில மனக் கசப்புக்கள் உருவாகிய போதிலும் அவை அனைத்தும் கடந்த காலத்துடன் ஒன்றாய்க் கலந்து மறைந்து விட்டன. மீண்டுமொருமுறை சகல இனத்தவரும் சமாதானமாகவும் ஒற்றுமையாகவும் செயற்பட ஆரம்பித்திருக்கின்றோம். பல நூற்றாண்டுகளாக போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் ஆங்கிலேயர் போன்ற மேற்கத்திய இனத்தவர்களின் செல்வாக்கிற்குட்பட்டுக் கிடந்த கிழக்கு மாகாணம் நீண்டகால யுத்தத்தினைப் போன்றே சுனாமி, சூறாவளி, வெள்ளப் பெருக்கு போன்ற இயற்கை அனர்த்தங்களினாலும் துயரங்களை அடைந்திருந்தது. நீங்கள் எந்தவொரு இனத்தையோ சமயத்தையோ குழுவினையோ அரசியல் கட்சியினையோ சார்ந்தவராக இருப்பினும் உங்கள் நினைவிலே நீங்கள் முற்று முழுதாக மக்களினால் தெரிவு செய்யப்பட்டுள்ள மக்கள் பிரதிநிதிகள் என்பதாக இருக்க வேண்டும். கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து அவற்றைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது தங்களது பிரதான கடமையாகவும் பொறுப்பாகவும் அமைகிறது.

யுத்தம் முடிவடைந்த போதிலும் சில நாடுகள் இன்னும் எமது நாட்டை சீர்குலைக்க முயற்சித்து வருவது நாம் அனைவரும் அறிவோம். இத்தகைய தவறான வழிநடத்தல்களிற்கு மக்கள் பிரதிநிதிகளாகிய நீங்கள் பங்களிப்பு வழங்க மாட்டீர்கள் என நான் நம்புகின்றேன். இனங்களுக்கிடையே நல்லுறவையும் சமாதானத்தையும் உருவாக்கவும் கிழக்கு மாகாணத்தை ஏனைய மாகாணங்களுடன் சம அந்தஸ்திற்கு கொண்டு வருவதற்காகவும் நீங்கள் அனைவரும் திடசங்கற்பம் பூண்டு நிற்க வேண்டும் என விரும்புகின்றேன். ''இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமிக்க நாடொன்றாக்குதல்'' என்னும் வரலாறு படைக்கும் பயணத்தில் கிழக்கு மாகாணமும் அதன் பங்களிப்பினைச் செய்வதற்கு சகல வழிவகைகளையும் மேற்கொள்ள வேண்டும். ஆளும் கட்சியினர் எதிர்க்கட்சியினர் யாவரும் கிழக்கு மாகாணத்தின் நலன் என்ற ஒரு பொது நிகழ்ச்சி நிரலில் செயலாற்றுவதை மீண்டுமொருமுறை நினைவூட்டி உங்கள் அனைவருக்கும் சுபீட்சமான சிறந்த எதிர்காலம் அமைய வேண்டுமென வாழ்த்தி எனது ஆரம்ப உரையினை நிறைவு செய்கின்றேன்.